**நவம்பர் – 11**

# TNPSC துளிகள்

- அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பு ஆனது, தோஹாவில் நடைபெற்ற AFC வருடாந்திர விருதுகளில் வெண்கலப் பிரிவில் அடித்தட்டு நிலை மேம்பாட்டு கால்பந்து போட்டிக்கான ஆசிய கால்பந்து கூட்டமைப்பு (AFC) தலைமையின் அங்கீகார விருதை வென்றுள்ளது.
    - 2014 ஆம் ஆண்டில் இதே அங்கீகாரத்தைப் பெற்றதையடுத்து, அப்பிரிவில் அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பு பெற்ற இரண்டாவது வெண்கலப் பதக்கம் இது ஆகும்.
- சுவீடன் நாட்டுப் பாதுகாப்பு நிறுவனமான சாப், இந்தியாவில் ஏவுகல தயாரிப்பு மையத்தினை அமைப்பதற்கான திட்டத்திற்கு மத்திய அரசு அங்கீகரிகாரம் அளித்து உள்ளதையடுத்து பாதுகாப்புத் துறையில் மேற்கொள்ளப்படும் முதலாவது 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டு (FDI) திட்டமாக இது மாறியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## இணையவழி விளையாட்டுகள் சட்டம் – 2022




- 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத் தடை மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தினை முழுவதுமாக ரத்து செய்ய சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.
- ஆனால் இந்த தடையானது வாய்ப்பு சார்ந்த விளையாட்டுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் ரம்மி மற்றும் போக்கர் போன்ற திறமை சார்ந்த விளையாட்டுகளுக்கு பொருந்தாது என்றும் தீர்ப்பளித்தது.
- திறமை சார்ந்த விளையாட்டுகளாகக் கருதப்படும் ரம்மி மற்றும் போக்கர் விளையாட்டுகளும் தற்போது இணைய வழியிலும் விளையாடப் படுகின்றன.
- இணையவழி விளையாட்டுகளை விளையாடுபவர்களுக்கு வயது வரம்புகளை விதிப்பது, விளையாட்டுகளை விளையாடுவதற்கான பண வரம்பு மற்றும் நேர வரம்புகளை நிர்ணயிப்பது தொடர்பான விதிமுறைகளை வகுக்கும் மாநில அரசின் உரிமைக்கு நீதிபதிகள் அங்கீகாரம் அளித்துள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டு சட்டம் ஆனது, குறிப்பாக இணையவழி விளையாட்டுகள்

தொடர்பான விதிகளை மட்டுமே வழங்குகிறது தவிர மற்ற நேரடி களம் சார்ந்த விளையாட்டுகளுக்கு அல்ல.

## வேளாண் நிலங்களில் வன விலங்குகளின் அச்சுறுத்தல்




- வனவிலங்கு மோதல்களால் விவசாயிகள் எதிர்கொள்ளும் துயரங்களைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு சிறப்புக் குழுவானது, தமிழ்நாட்டில் வேளாண் நிலங்களில் வன விலங்குகளால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து விவாதிப்பதற்காக காணொளி வாயிலான சந்திப்பினை நடத்தியது.
- 19 பேர் கொண்ட குழுவின் இந்த முதல் கூட்டத்தில், ஈரோடு, கோவை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் காட்டுப்பன்றிகள், மயில்கள், யானைகள் மற்றும் சில சமயங்களில் குரங்குகளால் ஏற்படும் பயிர் சேதங்கள் குறித்து தங்கள் கவலைகளைத் தெரிவித்தனர்.
- இந்தக் குழு கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு களப் பார்வையை மேற்கொண்டு அவற்றின் வனவிலங்கு, குறிப்பாக காட்டுப்பன்றிகளின் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கான மேலாண்மை உத்திகளை மதிப்பீடு செய்யும்.

# தேசியச் செய்திகள்


## பாரத் ஆட்டா




- மத்திய அரசானது, ‘பாரத் ஆட்டா’ என்ற கிலோவிற்கு 27.50 ரூபாய் என்ற மானிய விலையில் கோதுமை மாவு வழங்கும் புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இத்திட்டம் சமூகத்தின் ஏழை மற்றும் நலிவடைந்தப் பிரிவினருக்கு மலிவு விலையில் கோதுமை மாவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாரத் ஆட்டா என்பது கோதுமை, அரிசி மற்றும் பருப்புகளின் கலவையுடன் தயாரிக்கப் படும் ஒரு செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகும்.
- இது புரதம், இரும்புச்சத்து மற்றும் பிற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் நல்ல உணவு மூலமாகும்.
- இத்திட்டத்திற்கான இலக்காக நிர்ணயிக்கப்பட்ட மக்களுக்கு மலிவு விலையில் கோதுமை மாவு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், பொது விநியோக திட்டம் (PDS) மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## பருத்தி உற்பத்தி 2023-2024




- 2023-2024 ஆம் ஆண்டு பருத்தி உற்பத்தி பருவத்தில், மேற்கொள்ளப்பட்ட பருத்தி உற்பத்தியானது செப்டம்பர் 30 ஆம் தேதியன்று முடிவடைந்த பருவத்தை விட 6% குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- பருத்தி உற்பத்தி மற்றும் நுகர்வுக்கான குழுவானது, நடப்பு பருவத்தில் மேற்கொள்ளப் பட்ட (2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை) பருத்தி உற்பத்தியானது 316.57 லட்சம் பேல்கள் (தலா 170 கிலோ) இருக்கும் என மதிப்பிட்டுள்ளது.
- இது 2022-2023 ஆம் ஆண்டில் 336.60 லட்சம் பேல்களாக இருந்தது.
- ஜவுளி ஆலைகளின் மொத்த நுகர்வு ஆனது, கடந்தப் பருவத்தில் பதிவான 295 லட்சம் பேல்களுடன் ஒப்பிடுகையில் 294 லட்சம் பேல்களாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- ஏற்றுமதி 25 லட்சம் பேல்களாகவும், இறக்குமதி 12 லட்சம் பேல்களாகவும் இருக்கும்.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## குஷா திட்டம்

- 'குஷா திட்டம்' எனப்படும் இந்தியாவின் சொந்த நீண்ட தூர வரம்பு உடைய வான் பாதுகாப்பு அமைப்பினைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு

உருவாக்கி வருகிறது.


- இது நீண்ட தூரத்தில் உள்ள சீர்வேக ஏவுகணைகள், ரேடாருக்குப் புலப்படாத போர் விமானங்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள் உள்ளிட்ட எதிரி நாட்டு எறிகணைகள் மற்றும் கவச அமைப்புகளை கண்டறிந்து அழிக்கும் திறன் கொண்டதாக இருக்கும்.
- உயர் இலட்சியமிக்க இத்திட்டம் ஆனது, இஸ்ரேலின் இரும்புக் கவச அமைப்பை விட சிறப்பாகச் செயல்படுவது மட்டுமல்லாமல், ரஷ்யாவின் S-400 அமைப்பு மற்றும் அமெரிக்காவின் 'பேட்ரியாட்' அமைப்பு ஆகியவற்றின் செயல்திறனுக்கும் இணையான திறன் கொண்டதாக இருக்கும் என நம்பப்படுகிறது.
- உள்நாட்டு நீண்ட தூர வரம்புடைய நிலம் விட்டு வான் பாயும் பாதுகாப்பு அமைப்பு (LR-SAM) ஆனது, இடைமறிப்பு எறிகணைகளுடன் கூடிய நீண்ட தூர வரம்புடைய கண்காணிப்பு மற்றும்ஏவுகணை கட்டுப்பாட்டு ரேடார்களை உள்ளடக்கியது.
- இந்த ஏவுகணைகள் 150 கி.மீ., 200 கி.மீ., மற்றும் 350 கி.மீ என்ற தூரத்தில் உள்ள எதிரி நாட்டு இலக்குகளை கண்டறிந்து தாக்கும்.
- இது உத்திசார் மற்றும் போர்த்திறம் சார்ந்தப் பாதுகாப்பினை வழங்குவதில் பயன் உள்ளதாக இருக்கும்.
- இரண்டு ஏவுகணைகள் ஒன்றன் பின் ஒன்றாக ஏவப்படும் போது, இந்த அமைப்பு குறைந்தபட்சம் 80% மற்றும் 90%க்கும் அதிகமான அழிப்பு வாய்ப்பைக் கொண்டு உள்ளது.





## பிரலய் போர்த்திறம் சார்ந்த உந்துவிசை ஏவுகணை

- இந்தியா 'பிரலய்' எனப்படும் குறுகிய தூர வரம்புடைய போர்த்திறம் சார்ந்த ஏவுகணையினை வெற்றிகரமாக சோதனை செய்தது.
- இந்த ஏவுகணையானது, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உருவாக்கப்பட்டது.
- பிரலய் என்பது 350-500 கிலோமீட்டர் தூர தாக்குதல் வரம்பு மற்றும் 500 முதல் 1,000 கிலோகிராம் வரையிலான வெடிபொருளை சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- இந்த ஏவுகணையானது குறிப்பாக, சீன எல்லையில் உள்ள மெய்க் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் நிலைநிறுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இது ஒரு உந்துவிசை பாதையை விட தாழ்வான மட்டத்தில் பறப்பதோடு, எறிபாதை முழுவதும் அதிக வேகத்தை சீராக நீட்டிக்கச் செய்கிறது.
- இந்த ஏவுகணையானது கேனிஸ்டர் உருளை கட்டமைப்பினைக் கொண்டுள்ளது.




## $CO_2$விலிருந்து CO ஆக மாற்றம்




- புதைபடிவ-எரிபொருள் சார்ந்த மின் நிலைய உமிழ்வில் வெளியாகும் கரியமில வாயு அளவைக் கணிசமாகக் குறைக்கக் கூடிய ஒரு அறை-வெப்பநிலை முறையை ஆராய்ச்சியாளர்கள் செயல்விளக்கிக் காட்டியுள்ளனர்.
- இந்த எதிர்வினையில், திடமான கார்பன் அணுக்கள் கார்பன் டை ஆக்சைடு வாயுவில் உள்ள ஆக்ஸிஜன் அணுக்களுள் ஒன்றில் இணைந்து, அதனை கார்பன் மோனாக்சைடாக மாற்றுகிறது.
- இந்தப் பரிமாற்றத்திற்கு பொதுவாக அதிக வெப்ப வடிவிலான - குறைந்தபட்சம் 700 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை- கணிசமான அளவு ஆற்றல் தேவைப்படுகிறது.
- எனவே வெப்பத்திற்குப் பதிலாக, தனிப்பட்ட அலுமினிய நுண் துகள்களில் உலாவக்

கூடிய கட்டுப்படுத்தப்பட்ட மேற்பரப்பு பிளாஸ்மோன்கள் (LSPs) எனப்படும் எலக்ட்ரான்களின் அலைவு அலைகளிலிருந்து பெறப்பட்ட ஆற்றலை அக்குழு எடுத்துக் கொண்டு இந்தச் செயல்முறையை மேற்கொண்டது.


# முக்கிய தினங்கள்

## உலக கதிரியக்கவியல் தினம் – நவம்பர் 08




- சுகாதார அமைப்பில் கதிர்ப்படப் பதிவாளர்களின் முக்கியப் பங்கு பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1895 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று, ஜெர்மன் நாட்டு இயற்பியலாளர் ஆன வில்ஹெல்ம் கான்ராட் ரோன்ட்ஜென் ஊடு-கதிர்வீச்சுகளைக் கண்டுபிடித்தார்.
- கதிரியக்கவியல் என்பது மனித உடலில் உள்ள திசுக்கள், உறுப்புகள், எலும்புகள் மற்றும் நாளங்களின் படங்களை வழங்குவதற்கு கதிர்வீச்சைப் பயன்படுத்தும் அறிவியல் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “நோயாளியின் பாதுகாப்பைக் கொண்டாடுதல்” என்பதாகும்.

## குருநானக் தேவ் பிறந்த நாள் – நவம்பர் 08




- முதலாவது சீக்கிய குருவான குரு நானக் அவர்களின் பிறந்த நாள் ஆனது குருநானக் ஜெயந்தி ஆகும். இது குருநானக் பிரகாஷ் உத்சவ் என்றும் அழைக்கப்படுகிறது.
- சீக்கியச் சமூகத்தை வடிவமைப்பதிலும் பலப்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றிய

முதல் சீக்கிய குருவின் பிறந்தநாள் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இது கொண்டாடப்படுகிறது.

- குரு நானக் அவர்கள் சீக்கிய மதத்தை நிறுவியதாக நம்பப்படுகிறது.
- நானா கூஷாஹி நாட்காட்டியின்படி, குருநானக் அவர்கள் ஏப்ரல் 14 ஆம் தேதி அதாவது வைசாகி அன்று பிறந்ததாக நம்பப்படுகிறது.
- இருப்பினும், சில சீக்கிய சமூகங்கள் குருநானக் அவர்கள் அக்டோபர் மற்றும் நவம்பர் இடையே வரும் சந்திர மாதமான கார்த்திகை முழு நிலவு நாளில் பிறந்தார் என்று நம்புகிறார்கள்.

## உலக நகரத் திட்டமிடல் தினம் – நவம்பர் 08




- நல்ல திட்டமிடல் ஆனது மக்களின் வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்துகிறது மற்றும் சமூகத்திற்குப் பெரிய அளவில் நன்மைகளை அளிக்கிறது, ஒன்றாக வாழ்வதற்கான, வேலை செய்வதற்கான மற்றும் ஒன்றாக விளையாடுவதற்கான இடங்களை உருவாக்குகிறது என்பதைக் கொண்டாடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அர்ஜென்டினாவைச் சேர்ந்த பேராசிரியர் கார்லோஸ் மரியா டெல்லா பாலோரா 1949 ஆம் ஆண்டில் புயினோஸ் எரிஸில் உலக நகர திட்டமிடல் தினத்தின் கொண்டாட்டத்தினைத் தொடங்கினார்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'உலகளாவிய தகவலைக் கற்று, உள்நாட்டில் செயல்படுத்துதல்' என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★